செய்தி வெளியீடு எண்: 149/2017 நாள்: 15.03.2017.

**தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய கூட்டம் தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பேராயர் மரு.எம்.பிரகாஷ் அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது.**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய கூட்டம் தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பேராயர் மரு.எம்.பிரகாஷ் அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.

தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பேராயர் மரு.எம்.பிரகாஷ் அவர்கள் பேசியதாவது.

தமிழ்நாட்டில் வாழும் மதம் மற்றும் மொழி வாரியான சிறுபான்மையினரின் நலன்களை பேணிக் காத்திடவும் அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கிருத்துவர்கள், இஸ்லாமியர்கள், சீக்கியர்கள், புத்தமத்தினர், பார்சிகள்,(ஜொராஷ்ரியர்கள்) மற்றும் சமண மதங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமே மதவழி சிறுபான்மையினத்தவராக கருதப்படுகின்றனர். வேலூர் மாவட்டத்தில் சிறுபான்மையினரின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கல்வி உதவித்தொகை, சிறுபான்மையின மாணவ மாணவியருக்கான பொதுப்பரிசுகள் வழங்கும் திட்டம், மாநில அள்விலான உருது மொழிப்பரிசுகள் திட்டம், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல திட்டம் இத்திட்டத்தில் மாவட்டத்தில் இதுவரை 1412 பேர் உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளனர் இதுவரையில் 299 பயனாளிகளுக்கு ரூ5.08 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் திட்டங்கள், சிறுபான்மையினத்தை சேர்ந்தவர்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும் வகையில் வியாபாரம் மற்றும் தொழில்கள் செய்வதற்கு மிகக்குறைந்த வட்டிவித்தில் பல்வேறு கடனுதவி திட்டங்கள் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (டாம்கோ) மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரையில் வேலூர் மாவட்டத்தில் 483 பயனாளிகளுக்கு ரூ.205.48 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்திய அரசு மூலம் சிறுபான்மையினர் நலனுக்காக 15 அம்ச நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது போல தமிழக அரசும் இந்திய அரசும் சிறுபான்மையின மக்களுக்காக தொடர்ந்து நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தி வருகிறது. ஆகவே இந்த கூட்டத்தில் கலந்துக்கொண்டுள்ள நலவாரிய உறுப்பினர்கள் தங்களுடைய ஆலோசனைகளையும் குறைகளையும் தெரிவித்தால் அவற்றை தீர்க மாவட்ட ஆட்சித்தலைவருக்கு பரிந்துரைத்து உடனடியாக தீர்வு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணையத்தின் தலைவர் அவர்கள் கூட்டத்தில் பேசினார்.

மேலும் கூட்டத்தில் சிறுபான்மையினர் இனத்தை சார்ந்த மாணவ மாணவியர்களுக்கு மற்றும் இளைஞர்களுக்கு இந்திய மற்றும் தமிழக அரசு மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு கல்வி திட்டங்கள், புதிய தொழில் தொடங்குவதற்கு வழங்கப்படும் வங்கிகடன்கள் குறித்தும் மசூதிகள், கிறித்துவ ஆலயங்கள் புணரமைப்புகளுக்கு அரசால் வழங்கப்படும் நிதியுதவிகள் குறித்தும் திட்டத்தை விரிவாக அனைவரும் தெரிந்து கொண்டு பயனடையும் விதமாக மாநில சிறுபான்மையின ஆணைய உறுப்பினர் திரு.யு.சுதீர் லோதா அவர்கள் கனிணியில் பவர் பாயின்ட் மூலம் விவரித்தார். மேலும் சிறுபான்மையினர் தங்களுடைய நீண்ட கால பிரச்சனைகள் மீது தீர்வு கிடைக்கவில்லை என்றால் அவற்றை தாங்களே pgportal.gov.in என்ற இணை தள முகவரியில் பதிவுசெய்து அவற்றின் மீது உடனடியாக தீர்வு கிடைக்கபெறும் இவற்றை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ளவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் வேலூர் மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கத்தின் மூலம் 14 ஏழை முஸ்லீம் மகளிர்களுக்கு உதவித்தொகையாக ரூ59 ஆயிரத்திற்கான காசோலையினை தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பேராயர் மரு.எம்.பிரகாஷ் அவர்களும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும் வழங்கினார்கள்.

இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தா.செங்கோட்டையன், மாநில சிறுபான்மையின ஆணைய உறுப்பினர்கள் திரு.யு.சுதீர் லோதா, திரு.கே.கலாமணி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.ஜெயபிரகாஷ், மாவட்ட சிறுபான்மையினர் நலச்சங்க பிரதநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,வேலூர்-9.

15/3/17